நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு
குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை
பதவி வெற்றிடங்கள்

2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகமாக தாபிக்கப்பட்டுள்ள, இந்தக் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையில் நிலவுகின்ற பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பணிப்பாளர் (நிதி) - பதவிகள் - 01

சம்பள அளவுத்திட்டம்:
HM 1-3-2025-152,500-15X4,100-214,000.00

அடிப்படைச் சம்பளப் படிநிலை:

2026.01.01 ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூ. 133,028.00

2027.01.01 ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூ. 152,500.00

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 2025/01 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2025/01/01 - 2025/12/31)

தகைமைகளும் அனுபவமும்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ / வணிக நிர்வாகம் / வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / கணக்கியல் அல்லது வேறு ஏதேனும் உரிய விடயப் பரப்பில் முதற்தரப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் அல்லது ஏதேனும் உரிய விடயப் பரப்பில் பட்டப்பின்படிப்புப் பட்டத்தைப் (முதுமானி) பெற்றிருத்தல் அல்லது பதவிக்குரிய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இணைப் பொது உறுப்புரிமைத் தகைமையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பட்டத்தைப் பெற்றதன் பின்னர் அரச சேவையில், அரச கூட்டுத்தாபனத்தில், நியதிச்சட்ட சபையில் அல்லது பொருத்தமான அரச சார்பற்ற நிறுவனத்தில் அல்லது வர்த்தக நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டத்திலான" ஒரு பதவியில் ஆகக்குறைந்தது பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / பொது நிர்வாகம் / மனிதவள முகாமைத்துவம் அல்லது வேறு பொருத்தமான விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பட்டய தொழில்முறை நிறுவனத்தில் முழுமையான உறுப்புரிமை தகைமையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க சேவையில், அரச கூட்டுத்தாபனத்தில், நியதிச்சட்ட சபையில் அல்லது பொருத்தமான அரச சார்பற்ற நிறுவனத்தில் அல்லது வர்த்தக நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டத்திலான" ஒரு பதவியில் ஆகக்குறைந்தது பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்:

இப்பதவி தொடர்பில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

முகாமைத்துவ சேவைகள் (MM) பிரிவில் தரம் 1 பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட கால பொருத்தமான விடயப் பரப்பில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது:

35 வருடங்களுக்கு குறையாததாகவும் 55 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

2. புலனாய்வு அதிகாரி (MA 4) - பதவிகள் - 01

சம்பள அளவுத்திட்டம்:

MA 4: ரூ. 64,320-10x1,360-15x1,670-5x2,040-113,170

அடிப்படைச் சம்பளப் படிநிலை:

2025.01.01 ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூ. 52,875.00

2026.01.01 ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூ. 58,598.00

2027.01.01 ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூ. 64,320.00

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 2025/01 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2025/01/01 - 2025/12/31)

தகைமைகளும் அனுபவமும்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டத்துறையிலான முதற் பட்டத்தைப் (LL.B) பெற்றிருத்தல் அல்லது சட்டம் அல்லது குற்றவியல் (Criminology) ஒரு பாடமாக உள்ளடக்கப் பட்டுள்ள பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் பரிசோதகர் (IP) தரத்திற்கு குறையாத பதவியொன்றை வகிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியாக இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்:

இப்பதவி தொடர்பில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாரா (MA 1-1) சேவைப் பிரிவில் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது எட்டு (08) வருட கால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது:
22 வருடங்களுக்கு குறையாததாகவும் 45 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

நன்மைகள்:

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1 மற்றும் 2 ஆம் பதவிகளுக்கான வாழ்க்கைச்செலவுப் படி.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் பதவிக்கு திறைசேரியின் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உரித்தாகும் ஏனைய கொடுப்பனவுகள் (தொழில்சார் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு, தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவு).
3. அதிகாரசபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக (EPF) 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக (ETF) 3% பங்களிப்பு செய்யப்படும் .

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று (2026.11.27) இத்தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

பொது நிபந்தனைகள்:

1. **ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

   I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   II. பதவிக்குரிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கும், அதேபோன்று தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும் தேவையான உடல் உள தகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.
   III. நல்லழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
2. மேலே குறிப்பிட்ட தகைமைகளையும் மற்றும் பதவிக்குரிய அனுபவங்களையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
3. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக (EPF) உங்களது பங்களிப்பாக 8% தொகையை நீங்கள் செலுத்த வேண்டும்.

4. விண்ணப்பதாரர்களினால் மேற்கொள்ளப்படும் முறையற்ற செல்வாக்கு செலுத்தல்கள் அல்லது தகாத விசாரணைகள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும்.
5. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் எல்லா விண்ணப்பங்களும், சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், அனுபவம் மற்றும் எல்லா விபரங்களையும் உள்ளடக்கி உங்களால் தயாரிக்கப்பட்ட ஒரு சுயவிபரக்கோவை (CV), அனைத்து சான்றிதழ் பிரதிகளுடனும் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு **2026.11.27** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்கத்தின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

தலைவர்
குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை,
428/11 ஏ, முதலாம் மாடி, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.

தொ. பே. இல: 0112879539
திகதி: 2026.11.09